எல்லாம்வல்ல ஏகனேதுணை

# நினைவு மலர்

மண்ணில் | விண்ணில்

1925 | 2018

01 | 04

10 | 03



அமரர்

## திருமதி. சின்னப்பிள்ளை தெய்வநாயகம்

ஓய்வுபெற்ற அதிபர்

காரைதீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். திருமதி. S. தெய்வநாயகம்

ஓய்வுபெற்ற அதிபர்

# கண்ணீர்க்காவியம்



நல்லம்மா அதிபரினதும் குடும்பத்தினரதும்,
நிந்தவூர் மக்களதும்
நினைவாஞ்சலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திருமதி. சின்னப்பிள்ளை தெய்வநாயகம்

ஓய்வுபெற்ற அதிபர்

**மலர்வு**

1925.01.10

**உதவியாசிரியர்**

1943.01.04 – 1965.05.31

**ஆசிரிய பயிற்சி**

1960 – 1961

**அதிபர்**

1965.06.01 – 1985.01.09

**வாழ்க்கைத்துணை**

அமரர் கந்தையா தெய்வநாயகம் அதிபர்
களுவாஞ்சிக்குடி

**உதிர்வு**

2018.04.03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரிசுகள்

1. தயாபரன் : ஓய்வுபெற்ற தொழில்திணைக்கள அதிபர்

2. அமரர் கிருபாகரன் :

B.A. சிறப்புப்பயிற்சி (கணிதம்) யாழ் பல்.கழகம் ன ., Dip in. ELT (Tertiary Level) Colombo. M.A. (Linguistic) Kelaniya University ) தலைவர் ஆங்கில மொழிப்பிரிவு, கிழக்குப் பல்கலைக்கழகம்

3. திருமதி. கலாமணிதேவி பாலகிருஷ்ணன் :

ஓய்வுபெற்ற நிருவாக உத்தியோகத்தர்

4. சிறிதரன் : லண்டன் முன்னாள் மக்கள்வங்கி உத்தியோகத்தர், யாழ் இந்துக்கல்லூரி பழைய மாணவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. அமரர் சசிதரன் : மாணவனாக இருக்கும்போதே
அமரராகிவிட்டார்

6. திருமதி. தாரணிதேவி திலகராஜா :
முகாமைத்துவ உதவியாளர்,
பிரதேச செயலகம், நிந்தவூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமக்கள்

1. அமரர் திருமதி. சரஸ்வதி தயாபரன் : காரைதீவு

2. திருமதி. கிருபராணி கிருபாகரன் :
குருக்கள்மடம்

3. திரு. பாலகிருஷ்ணன் : ஓய்வுபெற்ற
தொழில்நுட்பவியலாளர்,
காகித ஆலை,
வாழைச்சேனை.

4. திருமதி. வினோதினி சிறிதரன் :
லண்டன் முன்னாள்
ஆசிரியை, காரைதீவு

5. திலகராஜா : பொறியியலாளர் - பட்டிருப்பு,
கிழக்குமாகாண நீர்ப்பாசனத்
திணைக்களப் பணிப்பாளரும்,
சட்டத்தரணியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கற்பா

கண்ணகி அம்மனின்
ஆலயத்தால் மட்டுமன்றி
புவியெங்கும் புகழோங்க
யாழ்நூலை ஆக்கித்தந்த
முத்தமிழ் வித்தகராம்
விபுலானந்த அடிகளாலும்
காசினியில் பெயர்பெற்றோங்கும்
காரைதீவு மாநிலத்தில்
கருணைவள்ளல் கந்தையா
அன்னப்பிள்ளை தம்பதிகள்
மணவாழ்வில் இறைஅளித்த
மக்கள்செல்வம் ஐவரிலே
இருபத்தி ஐந்தாமாண்டு
தைத்திங்கள் பத்தாம்நாள்
அழகுமகள் சின்னப்பிள்ளை
நாலாவதாய்ப் புவிபிறந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பக்கல்வியை நீர்
R.K.M. ல் ஆரம்பித்து
அங்கேயே கல்விகற்று
S.S.C. யும் சித்திபெற்று
ஆசிரிய நியமனத்தால்
நற்பிட்டி முனைசென்று
ஆண்டொன்று ஐந்துமாதம்
அவ்வூரில் படிப்பித்து
நாற்பத்து நாலாமாண்டு
ஆடித்திங்கள் முதலாம்நாள்
நிந்தவூர் முஸ்லிம்பெண்கள்
பாடசாலைக்கு மாற்றம்பெற்று
ஐந்தாந்தரத் தோடிருந்த
ஆரம்பப்பாட சாலையிலே
பன்னிரண்டு வருடங்கள்
பணியாற்றி மாறிச்சென்றீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியபல கஷ்டப்பட்டு
அதிபர் மகிழும்மாஅவர்கள்
ஐந்தாந்தரத்தை ஆரம்பித்த
அழியாப்புகழ் ஆண்டுமதுவே
வாகனமே எதுமில்லாக்
காலமதில் தந்தையோடு
கூட்டுவண்டி ஏறிவந்து
அதிபருடன் குடியிருந்து
காலைமாலை இயங்கிவந்த
இருநேரப் பாடசாலையதில்
கடமைதனைப் பொறுப்பேற்றுக்
கற்பித்த வேளையிலே
ஒரேயொரு மாணவியாய்
ஐந்தாந்தரம் படித்தநானும்
பின்னேரத்தில் உங்களிடம்
பின்னல்கலையைக் கற்றுத்தேர்ந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்காக ஆரம்பித்த
ஏழாம்ஆண்டைப் பொறுப்பேற்று
என்னைஉங்கள் அருகில்வைத்து
எல்லையில்லா அன்புகாட்டி
படிப்பித்த காலமதில்
பரீட்சைகளில் நான்பெற்ற
புள்ளிகளைப் பார்க்கவந்த
பரீட்சகர்கள் உனைப்போற்றி
பாராட்டிப் புகழ்ந்துரைத்து
என்னையுமே வாழ்த்தியது
சம்பவத்திரட்டில் இன்றும்
சரித்திரமாய் இருக்குதம்மா
கல்வியுடன் கலைகள்பல
கற்றுத்தந்த தாயேஇதைச்
சொல்லியழ யாருமில்லை
தனிமையிலே புலம்புகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருண்டகருந் தலைமுடியும்
சுந்தர வதனமதும்
சிரித்த முகத்துடனே
சிறந்தநல்ல பண்புகளும்
நிறைவாகப் பெற்றிருந்த
திருச்செல்வன் தெய்வநாயகத்தை
திருமணம் செய்யும்போது
நான்படித்தேன் ஏழாமாண்டு
அதிபருடன் ஆசிரியர்கள்
அனைவருமே ஒன்றுசேர்ந்து
மணமக்களை வாழ்த்தும்போது
மாணவிகளும் சேர்ந்துகொண்டோம்
மாறாதஇந்தக் காட்சி
மனத்திரையில் ஓடுதம்மா
ஆறாத் துயரத்தோடு
அதைப்பார்த்து அழுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரிய சேவையதை
நற்பிட்டிமுனையில் ஆரம்பித்து
நிந்தவூர், கரடிக்குழி,
வெம்பு மற்று பிறம்பு என்ற
ஊர்களளெல்லாம் நீஉதவி
ஆசானாய்ப் பணியாற்றி
ஆசிரியர் பயிற்சிபெற
மட்டக்களப்பு சென்றங்கே
அறுபது அறுத்தொன்றில்
இருவருடப் பயிற்சிபெற்று
சல்லித்தீவு சென்று உதவி
ஆசிரியராய்க் கற்பித்தபின்
அதிபராகி தம்பிலுவில்
சல்லித்தீவில் பணிபுரிந்து
இறுதியிலே நீபடித்த
பாடசாலைக்கு அதிபரானீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுவாஞ்சிக் குடிவாழ்ந்த
　　கனவான்கள் பரம்பரையாம்
கந்தையா பொன்னம்மா
　　தம்பதிகள் தவப்பயனால்
பெற்றெடுத்த ஏகமகன்
　　தெய்வநாயகம் ஆசானை
மணம்முடித்த இல்வாழ்வில்
　　இறையளித்த நன்கொடையாம்
மக்கள்செல்வம் ஆறுபெற்று
　　மகிழ்வோடு வாழுங்காலை
அருமைமக்கள் கிருபா, சசி
　　அமரர்களாய் விண்ணடைய
ஆறுதலை வரவழைத்து
　　அனைவருமே இருக்கும்போது
அன்னையேநீ பிரிந்தனையே
　　ஆறுதில்லை எம்மனது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் நால்வரையும்
பேரப்பிள்ளைகள் பதின்மூன்றையும்
பூட்டப்பிள்ளைகள் எண்மரையும்
பூவுலகில் விட்டுச்சென்றாய்
பென்சன்காசை எடுத்தவுடன்
பிள்ளைகள் அனைவருக்கும்
பங்கிட்டுக் கொடுத்துவிட்டு
பார்த்துமகிழும் உன்பாசத்தையும்
குழந்தைகளைக் கூடவைத்து
வரலாற்றுக் கதைகள்சொல்லி
அழகாகப் பாட்டும்பாடி
அறிவூட்டும் விதத்தினையும்
அனைவருமே சொல்லியழ
அருகிருந்தோர் மனமுருகி
வேதயைால் கண்ணீர்விட
விண்ணுலகம் சென்றனையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிந்தவூர் பெண்கல்விக்கு
நீர் செய்த சேவைகளை
வருங்காலச் சந்ததியும்
அறிந்துன்னை வாழ்த்துவார்கள்
இன்பதுன்பம் வந்துவிட்டால்
இனமத பேதமின்றி
எல்லோரும் ஒன்றுகூடி
கலந்துபேசி மகிழ்ந்தோமம்மா
கழிந்துபோன பொற்காலம்
அழிந்துகொண்டே போகுதம்மா
ஆனாலும் நம்பாசம்
அழியாதம்மா ஒருபோதும்
உங்களைப்போல் ஒருவரைநாம்
உலகினிலே காண்பதெப்போ
என்றேங்கித் தவிக்கின்றேன்
எப்படித்தான் மறப்பேனோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்ணூற்றுமூன்று வயதுவரை
மண்ணுலகில் வாழ்ந்துநல்ல
ஆசானாய் அதிபராய்
சமூகநல சேவகியாய்
இல்லத்தின் அரசியாய்
இறைபக்தையாய் நீஇருந்த
காலமெல்லாம் முடிந்ததென்று
காலன்உனை அழைத்திடவே
இரண்டாயிரத்துப் பதினெட்டு
சித்திரைத் திங்கள்மூன்றாம்நாள்(உன்)
இனியமக்கள் மருமக்கள்
பேரர்பூட்டர் மட்டுமன்றி
ஊரே திரண்டுவந்து
உன்பிரிவைத் தாங்காது
எல்லோரும் கதறியழ
ஏகினையே விண்ணுலகு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனை படைத்துச்சென்ற

சரித்த நாயகியாம்

மகிழம்மா கிருஷ்ணானந்தம்

பொற்சேவைக் காலத்திலே

ஆசிரியராக வந்துளம்

அறிவினையும் வளரச்செய்து

மகாவித்தியாலத் தரமுயர்வில்

பங்குகொண்ட மாதாவே

உன்பிரிவால் வாடுகின்ற

மக்கள் மருமக்களோடு

குடும்பத்தார் துயரினிலும்

நாங்களுமே பங்குகொண்டு

நிந்தவூர் நெஞ்சங்களின்

நீங்கா நினைவஞ்சலியாம்

கண்ணீர்க் காவியத்தைக்

காணிக்கையாய்ச் சமர்ப்பிக்கின்றேன்

உங்கள் ஆத்மாசாந்தியடையவதாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வண்ணம்,

நீங்காத சோகத்துடன்
நிந்தவூர் நெஞ்சங்கள் சார்பில்
நினைவாஞ்சலியாய்ச் சமர்ப்பிக்கப்படும்
கண்ணீர்க்காவியம்.

ஆக்கம் :
மாணவி, ஹாஜியானி மைமூனாகாதர் செயினுலாப்தீன்
அல் மஸ்ஹர் பெண்கள் உயர்தரப் பாடசாலை
ஸ்தாபக அதிபர்
நிந்தவூர்.
2018.04.27



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருமதி. எஸ். தெய்வநாயகம் அம்மாவின் பிறந்ததினப் புகைப்படம்.**



இடமிருந்து வலம் :

1. திரு. எஸ். திலகராஜா பொறியியலாளர் (மருமகன்),
2. செல்வி. T. சிந்துவர்ஷி (பேத்தியார்)- மருத்துவபீட மாணவி
3. அமரர். எஸ். தெய்வநாயகம் அம்மா,
4. திருமதி. தாரணிதேவி திலகராஜா (மகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் திரு. கே. தெய்வநாயகம்

அமரர் திருமதி. எஸ். தெய்வநாயகம் தம்பதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் எஸ். தெய்வநாயகம்

## ஓய்வுபெற்ற அதிபர் - காரைதீவு




நிந்தவூர் அல்-மஸ்ஹர் பெண்கள் உயர்தரப் பாடசாலையானது, அரசினர் முஸ்லிம் பெண்கள் பாடசாலையாக இருந்தபோது 1944.07.01ம் திகதி உதவியாசிரியையாகக் கடமையேற்று, "சாதனை படைத்த சரித்திர நாயகி" மகிழும்மா கிருஷ்ணானந்தம் அதிபர் அவர்களின் அரிய விடாமுயற்சியினால் பாடசாலை தரமுயர, உயர்ந்துவரும் வகுப்புக்களையும் பொறுப்பேற்று பாடசாலை வளர்ச்சியிலும் பங்கெடுத்துப் பணிபுரிந்த செல்வி சின்னப்பிள்ளை கந்தையா அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரெண்டு வருடங்களின் பின், திருமதி. எஸ். தெய்வநாயகம் என்ற பெயருடன், மணவாளன் க. தெய்வநாயகம் குழந்தைகள் குடும்பத்தோடு மகா வித்தியாலய ஆசிரியையாக மாற்றம் பெற்றுச் சென்றபோது அன்னாரின் சேவைநலனைப் பாராட்டிப் பிரியாவிடை கொடுத்து 1956.06.30ம் திகதி வழியனுப்பிவைத்த நிந்தவூர் மக்கள், 2018.04.03இல் அன்னார் இறையடி சேர்ந்ததையறிந்து மனம்வருந்தி அவரின் சேவைகளை நினைவுகூர்ந்து வெளியிடும் நினைவுமலரே இதுவாகும்.



afeecom



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org